மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை –10 அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை: மரு.இரா.சாந்திமலர், எம்.டி., டி.ஏ.,

ந.க.எண்:79284/நி2/4/2022 நாள்:25.07.2023

பொருள் : நிருவாகம் – தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.கா.ஜேம்ஸ் ஜெப ராஜன் த/பெ.(அமரர்) திரு.பி.காந்தாராவ், இளநிலை உதவியாளர், அரசு மருத்துவக் கல்லூரி, நாமக்கல் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் – பணிவரன்முறை ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை (நிலை)எண்:18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:23.01.2020 மற்றும் அதன் தொடர்புடைய ஆணைகள்.
2. அரசாணை (நிலை)எண்:48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:26.02.2020.
3. அரசு கடித எண்:8755/ஏடி2/2020–1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2)துறை, நாள்:16.03.2021.
4. இவ்வியக்கக பணி ஒதுக்கீட்டு ஆணை ந.க.எண்:64345/நி2/4/2021–101, நாள்:08.09.2021.
5. முதல்வர், அரசு மருத்துவக்கல்லூரி, நாமக்கல் அவர்களின் பணி நியமன ஆணை ந.க.எண்:3204/நி2/2021, நாள்:21.09.2021.
6. முதல்வர், அரசு மருத்துவக்கல்லூரி, நாமக்கல் அவர்களின் கடித ந.க.எண்:3204/நி3/2021, நாள்:05.09.2022 மற்றும் 13.03.2023.
7. அரசு கடித எண்:3736941/ஏடி2/2022–1, மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் (ஏடி2)துறை, நாள்:18.01/2023.

*****

**ஆணை:**

சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் செயற்கை அவய கைவினைஞராகப் (Prosthetic Craftsman) பணிபுரிந்து கொண்டிருந்த திரு.பி.காந்தாராவ் அவர்கள் 10.11.2010 அன்று பணியிடை இறந்துள்ளார். அவரின் பிறந்த தேதி 20.05.1964 ஆகும். அவரின் உத்தேச ஓய்வு பெறும் நாள் 31.05.2024 ஆகும். இவர் தாம் வகித்து வந்த செயற்கை அவய கைவினைஞர் பணியிடத்தில் தகுதிகாண் பருவம் முடித்தவர் ஆவார். மேற்படி அரசு ஊழியர் இறந்ததைத் தொடர்ந்து, அவரின் மனைவி திருமதி.கா.சூசன்னாசெல்வி என்பவர் தனது 30.11.2011–ஆம் நாளிட்ட கடிதத்தில், தனது மகன் திரு.கா.ஜேம்ஸ் ஜெப ராஜன் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி கோரி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்துள்ளார்.

..2...

Scanned with CamScanner

2) மனுதாரர் மகன் திரு.கா.ஜேம்ஸ் ஜெப ராஜன் அவர்களின் பிறந்த தேதி 15.12.1992 ஆகும். தனியர் பத்தாம் வகுப்பு தேர்ச்சியுடன், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்திருந்ததால், பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016)-ன்படி, தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக ரூ.19500 - 71900/- நிலை-8 (Level-8) என்ற சம்பள முறையில் பணிநியமனம் செய்யப்பட்டு, நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரியில் 24.09.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

3) எனவே, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.கா.ஜேம்ஸ் ஜெப ராஜன் என்பவரின் பணியினை, பார்வை 1, 2, 3 மற்றும் 7-இல் காணும் அரசாணை மற்றும் அரசு கடிதங்களின் அடிப்படையில், அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் சேர்ந்த நாளான 24.09.2021 முற்பகல் முதல், அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து, செயல்முறை ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுவதன் மூலம் தனியருக்கு முதலாம் ஆண்டுக்கான ஊதிய உயர்வு / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றை பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

இரா.சாந்திமலர்
மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர்

பெறுநர்

1. திரு.கா.ஜேம்ஸ் ஜெப ராஜன்,
இளநிலை உதவியாளர்,
அரசு மருத்துவக்கல்லூரி, நாமக்கல்.

– உரிய வழியாக.

2. முதல்வர், அரசு மருத்துவக்கல்லூரி, நாமக்கல்.
3. மாநில கணக்காயர், சென்னை -600 018.
4. மாவட்ட கருவூல அலுவலர், நாமக்கல்.

நகல்:

இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை, சென்னை-06.
உதிரி / இருப்புக் கோப்பு.

//உண்மை நகல் / அனுப்பபடுகிறது//

ந.க.எண்: 2588/ தி2/23, நாள்: 2/8/23

அனுப்பப்படுகிறது.

பெறுநர்:
திரு.கா.ஜேம்ஸ் ஜெபராஜன்,
இளநிலை உதவியாளர்,
அரசு மருத்துவக் கல்லூரி,
நாமக்கல்

நிருவாக அலுவலர்
அரசு மருத்துவக் கல்லூரி,
நாமக்கல் – 637 003.

மேலாளர்

Scanned with CamScanner